செய்து, புதிதாக தற்போது ஆய்வு செய்து, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மனுதாரர்களுக்கு மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, சாங்ஷன் செய்வதிலே தில்லுமுல்லுகள் நடந்ததாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். தில்லுமுல்லுகள் நடந்தன என்பதற்கு எந்தவிதமான ரிகார்டும் கிடையாது.

* 402 *Q.*— Dr. K. SAMARASAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government propose to relax the existing procedure that power supply to new pump-sets are prohibited for wells situated within a distance of 400 feet in Dharmapuri district where adequate vround water is available ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: கூட்டுறவு நிலவள வங்கி, கிராமப்புற மின் வசதிக் கழகம் ஆகியவையின் உதவியோடு மின் இணைப்பு வழங்கும் திட்டங்கள், இந்தக் கட்டுப்பாட்டிற்கு உட்படுகின்றன. மற்ற திட்டங்களின் கீழ் இணைப்பு வழங்குவதற்கு தற்போது இம்முறை அமுலில் இல்லை.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே தர்மபுரி மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக இருப்பதால் மட்டுமல்ல; அங்கே 3 ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருப்பவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள் என்ற காரணத்தால் மின் இணைப்பு கொடுப்பதில் இப்போதிருக்கின்ற விதியைத் தளர்த்தி, அத்தனை பேர்களுக்கும் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் 20,550 மனுக்கள் வந்திருக்கின்றன. அதிலே அனுமதி கொடுக்கப்பெற்றவை கிட்டத்தட்ட 3,500 தான். ஆகையால் அங்கே தேவை அதிகமாகும் அதேநேரத்தில் 'சாங்ஷன்' ஆனது 3,500 என்ற காரணத்தால் பல மனுதாரர்களுக்கு மின்சாரம் வழங்க முடியவில்லை. இதற்குத் தனியாகத் திட்டம் போடுவதற்கில்லை.